பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

- 6 JAN 2000
மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 22 வியாழக்கிழமை (06 - 01 - 2000) VALAMPURI ஒலி: 18

★ கொழும்பில் நடந்த பயங்கரச் சம்பவம்

# தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் நேற்று சுட்டுக் கொலை!

## இரண்டாயிரமாம் ஆண்டின் முதல் அரசியல் படுகொலை

(கொழும்பு வலம்புரி அலுவலகச் செய்தியாளர்)

**பிரபல சட்டமேதை அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மகனும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் சட்டத் தரணியுமான குமார்பொன்னம்பலம் நேற்றுக்காலை 10.30மணியள வில்இராமகிருஷ்ணா ரெறர்ஸ் வீதியில் வைத்து இனந்தெரியாத இளை ஞர் ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

நேற்றுக்காலை வெள்ள வத்தை இராமகிருஷ்ணா ரெறர்ஸ் வீதியில்வைத்து அகில இலங்கைத் தமிழ் காங் கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் இனம் தெரி யாத இளைஞர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம் பவம் பற்றி தெரிய வருவ தாவது.

சம்பவதினங்க்ளில் குமார் பொன்னம்பலத்தின் வீட்டிற் குச் சென்ற சாந்தை என் னும் இளைஞனுடன் வீட் டின் முன்புறம் இருந்து குமார் பொன்னம்பலம்பேசிக் கொண்டிருந்த பின்னர் அரை மணித்தியாலத்திற்குப் பின்பு வருகிறேன் என்று மகன் கஜேந்திரகுமாரனிடம் கூறி விட்டு சாந்தை என்னும் இளைஞனுடன் காரில் சென் றார்.

நேற்றுக்காலை 10,30மணி யளவில சனசந்தடி குறைவா கக் காணப்படும் இராம கிருஷ்ண ரெறர்ஸ் வீதியில் ஒரு இடத்தில் காரை குமார் பொன்னம்பலம் நிறுத்திய சமயம் 9 எம், எம், துப்பாக்கி யினால் இனந்தெரியாத ஒரு வரினால் சுடப்பட்டார். தலையின் வலது புறத்திலும், கழுத்தின் வலது புறத்திலும் சூட்டுக்காயம் பட்டு ஸ்தலத் திலேயே குமார் பொன்னம் பலம் மரணமானார்.

இச்சம்பவத்தை அடுத்து குமார் பொன்னம்பலம்பலத் துடன் காரில் சென்ற சாந் தை என்னும் இளைஞன்

(6 ம் பக்கம் பார்க்க)

## குமாருடன் காரில் சென்ற இளைஞர் சம்பவம் நடந்தவுடன் தலைமறைவு

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு குமார்பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட பின் அவரு டன் காரில் சென்ற சாந்தை என்னு இளைஞர் தலை மறைவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தை என்னும் இளைஞருடன்தான் குமார் பொன் னம்பலம் அரை மணித்தியாளத்தில் வருவேன் என்று மகன் கஜேந்திரகுமாரிடம் கூறிவிட்டு சென்றதாகவும் தெரியவந் துள்ளது.

## 4மணிநேரம் கழித்தே சடலம் எடுக்கப்பட்டது

வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதி, விவேகானந்த வீதி இரண்டையும் ஊடறுத்துச் செல்லும் இராமகிருஷ்ண ரெறக்ஸ் வீதியில் காரில் வைத்து காலை 6.30மணிக்கு சுட்டுக் கொல்லப்பட்ட குமார்பொன்னம்பலத்தின் சடலம் நான்கு மணித்தியாலம் கழித்தே(2,30)மணியளவில்கொலை செய்யப்பட்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## குமாரின் உடைமைகள் காணாமற்போயின

(கொழும்பு)

இனந்தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் அணிந்திருந்த தங்கச்சங்கிலி, தங்கக்கடி காரம், அவரது செலுலர் தொலைபேசி ஆகிய மூன்றும் காணாமல் போயுள்ளன.

அவை கொலையாளியினால் எடுத்துச் செல்லப்பட்டிருக் கலாம் என அவதானிகள் சந்தேகிக்கின்றனர்.

## இறுதிச் சடங்கு

குமார் பொன்னம்பலத்தின் இறுதிச்சடங்குகள்பற்றியவிப ரம் அமெரிக்காவில் உள்ள அவரது சகோதரியான திரு மதி சிவப்பிரகாசம்பிள்ளை கொழும்பு வந்த பின்பே தீர்மானிக்கப்படும் என்று குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

## குமார் பொன்னம்பலம் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில

- ★ 1938 இல் ஆகஸ்ட் 12 ஆம் திகதி பிறந்தார்.
- ★ 1974 இல் பாரிஷ்டப் பட்டம் பெற்றார். இயற்கை விஞ்ஞானத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றார்.
- ★ இரண்டு பிள்ளைகள். ஆண் - கஜேந்திரகுமார் பெண் - மிருலாஷினி
- ★ 1977 இல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட் டார்.
- ★ 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார்.
- ★ 1944 இல் இவர் அரசியலில் பிரவேசித்தார்.
- ★ 1966 அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணிச் செயலாளர்.
- ★ 2000-1-5 இல் சுட்டுக்கொல்லப்பட்டார். இறக்கும் போது வயது 61.

## கருத்து வெளியிடும் சுதந்திரம் அடிப்படை ஜனநாயக உரிமையாகும்

### இப் படுகொலை பேரழிவுக்கு இட்டுச்செல்லும்

(கொழும்பு)

கருத்து வெளியிடும் சுதந் திரம் ஜனநாயக அடிப்படை உரிமையாகும். தமது அடிப் படை உரிமையை பிரயோ கித்த காரணத்துக்காக திரு. குமார் பொன்னம்பலம் கொலைசெய்யப்பட்டிருப்பா ரேயானால் அது பெரும் அபாயகரமான போக்கு ஆகும்.

(6 ம் பக்கம் பார்க்க)

## சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும்

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. குமார்பொன்னம்பலம் சுட்டுக் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக ஐ. தே. கட்சித்தலைவர் திரு. ரணில்விக்கிரம சிங்கா கொலையை கண்டித்து அறிக்கை ஒன்றை விடுத் துள்ளார். அந்த அறிக்கையில் நாட்டின் சட்டம் ஒழுங்கு பாது காக்கப்படவேண்டும் என்று அரசிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரெலோ அமைப்பும் இப்படுகொலையைக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளது.

## தமிழர்களின் இதயம் நின்றுவிட்டது

[கொழும்பு]

இலங்கைத் தமிழர்களின் இதயம் நின்றுவிட்டது. தமிழ் மக்களை வருங்காலந் தில் கடவுள் தான் காப் பாற்ற வேண்டும் என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலா ளர் திரு மனோ கணேசன் விடுத்த அனுதாபச் செய்தி யில் மேற் கண்டவாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

---

கொழும்பில் பிரதமமந்திரியின் அலுவலகத்திற்கு அருகே

## நேற்றுக் காலையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்; பதின்மூன்று பேர் பலி! இருபத்திநான்கு பேர் காயம்!!

[கொழும்பு]

கொழும்பில் உள்ள பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு அருகே நேற்றுக் காலை 9.5 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக்குண் டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டுள் ளனர் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

தற்கொலையாளியும் ஏனைய ஐவரும் ஸ்த லத்திலேயே உயிரிழந்துள்ளனர் ஏனைய 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் காயமடைந்த 24 பேரில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது இவர்கள் அவசர சத்திர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்

இறந்தவர்களுள் 2 பொலீஸ் உத்தியோகத் தர்களும், 2 பெண் பொலிஸ் உத்தியோகத்தர் களும் ஒரு பொலீஸ் வாகனச்சாரதியும் அடங்குவர்

இத் தற்கொலைக் குண்டு தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாது.

தற்கொலைக் குண்டுதாரி என சந்தேகிக் கப்படும் நபர் காலையில் பிளவர் வீதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**சின்னஞ் சிறு விளம்பரம்**

**2000 ஆண்டில் 12 ராசிகள் பலன்**

எல்லா ராசிகளுக்குமான விரிவான பலன்கள் எழுதப்பட்ட நூல் எங்கும் விற்பனையாகின்றது வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கும் பலன்கள் எழுதப்பட்டுள்ளன நூல் ஆசிரியர் சோதிட ஞானி சண் மாஸ்டர் விலை ரூபா 15/- சிறி சாயிஅச்சகம் பூநாறிமரத்தடி கொக்குவில்


# செங்கலடி படையினர் சுற்றிவளைப்பு
# பொதுமக்கள் மீது விசாரணை

மட்டக்களப்பு - செங்கலடி நகரில் அண்மையில் படையினர் சுற்றிவளைப்பு தேடுதலில் ஈடுபட்டனர்.

செங்கலடி நகருக்கு பல்வேறு தேவைகளுக்காக வந்தோர் மற்றும் வியாபார நிலையங்களில் கடமையாற்றிய சிப்பந்திகள் அனைவரும் செங்கலடி தமிழ் மாகவித்தியாலய முன்றலுக்கு அழைக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

காலை எட்டு மணிக்குப் பின்னர் இச்சுற்றிவளைப்பு நடைபெற்றதால் அரசாங்க ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் இப்பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு இதுவாகும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புவியியற்துறைஇறுதிஆண்டு மாணவர்களுக்கான ஆய்வு முறையியல் (புவியியல்) பற்றிய கருத்தரங்கு இன்று புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இக்கருத்தரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன், புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

(த-7-29)

## பிரதேச செயலர் திடீர் சோதனை

உடுப்பிட்டிப் ப. நோ. கூ. சங்கத்தின்கரணவாய்ப்பகுதியில் காணப்படும் கிளைகளுக்கு கரவெட்டி பிரதேச செயலர் நேரில் சென்று பொருட்களின் தரம் விலை என்பவற்றை பரிசிலனை செய்தார்.

இவ்வாறு பிரதேச செயலர் பரிசிலனை செய்ததால் கரவெட்டிப் பகுதியில் தரமற்ற பொருட்கள் விற்பனை செய்வதையும் விலை உயர்வைத் தடுப்பதும் இலகுவானதாக இருக்கும் இதேபோல் ஏனைய பிரதேச செயலர்களும்மேற்கொள்ளவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (27)

# சுய இலாபம் கருதும் அரசியலாளர் மக்களை பிரித்து வைக்கின்றனர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்கு எண்ணிக்கைகளைப் பார்க்கும் பொழுது இந்த நாட்டில் எழுந்துள்ள வடக்கு -கிழக்கு பிரச்சினைகளைத் தீர்க்க பொ. ஜ. முன்னணியால் முடியாது என்பதே புலனாகிறது.

ஐ. தே. க. உடன் அரசு இணைந்து கொண்டால் மட்டுமே இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும், என்று நுவரெலிய மாநகர சபை உறுப்பினராகிய எட்மன்ஸ் இராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சி தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற பேதமின்றி அனைவரையும் ஒரேமாதிரியே மதித்து வருகிறது. பொ. ஜ. முன்னணியினர் இவ்வாறு பாகுபாடு காட்டி நடந்து கொண்டதனாலேயே நிலைமை இவ்வளவிற்கு மோசமாக வலுவடைந்துள்ளது.

இந்த நாட்டில் வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்க வேண்டுமானால் முதலில் தேசிய அரசு ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நாடு ஒரே சீரான ஆட்சியினால் வழி நடத்தப்படும். தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்ற இனப் பாகுபாடும் நீங்கப் பெறும்.

நமது நாட்டில் அரசியல் இலாபத்தை கருதி அரசியல் வாதிகள் மக்களைப் பிரித்து வைக்கின்றார்கள்.

இந்த நிலை முற்றுமுழுதாக மறைய வேண்டும். அரசியல் வாதிகளும் மக்களும் ஒரே அரசியல் நீரோட்டத்தில் இணைந்து பொருளாதார அபிவிருத்தி முயற்சிக்கு முன்மாதிரியாகச் செயலாற்ற வேண்டும் என்றார். (க-14)

## மட்டக்களப்பில் கடும் மழை

[மட்டக்களப்பு]

நேற்று அதிகாலை மட்டக்களப்பு மாவட்டத்தில்பெய்த பெருமழையினால் பாலமுனைப் பிரதேசத்தில் மரங்கள் அடியோடு சாய்ந்துள்ளன. சஞ்சீவி மரம் சாய்ந்து விழுந்ததனால்மின்சார வயர்கள் பற்றி எரிந்து பிரதேசமெங்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

(க)

### கட்டு நாயக்காவில்

# 85இலட்சம் பெறுமதியான'போதைவஸ்து வெளிநாட்டு பிரஜையிடமிருந்து மீட்பு!

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்று 85 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இப் போதைப்பொருட்கள் தமிழ் நாட்டிலிருந்து கொழும்பு வந்த ஓர் வெளிநாட்டு பிரஜையிடமிருந்தே கைப்பற்றப் பட்டுள்ளது.

இது தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் புலனாய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## நீர்வேலியில் விபத்து இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசாமி கோவிலடியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் -சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலையைச் சேர்ந்த சிவப்பிரகாசம், சிவசோதிநாதன் (வயது 36) கச்சாய் வீதி சாவகச்சேரியை சேர்ந்த இரத்தினம் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 34) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

(க-7)

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவள விழா நிகழ்வும் இல்லதிறப்புவிழாவும்

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவள விழா நிகழ்வும் ''சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லம்'' திறப்பு விழாவும் நாளையும் நாளை மறுதினமும் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற உள்ளன.

நாளை இடம்பெறவுள்ள நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

நாளை இடம்பெறவுள்ள நிகழ்வுகள் வருமாறு:

காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் 7 மணிக்கு பூசையும், தொடர்ந்து காலை 8.30 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி அன்னையர் இல்லத் திறப்பு விழாவும் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து முறையே மங்கள விளக்கேற்றல் திருமுறை ஓதல் என்பன இடம் பெறும் வரவேற்புரையை சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய சபாநாதன் நிகழ்த்துவார்.

ஆசியுரைகளை மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் பருத்தித்துறை சாரதா சேவாச் சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ சித்ரூபானந்தா சுவாமிகள், வட்டுக்கோட்டை தென் இந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் ஆகியோர் வழங்கியதைத் !தொடர்ந்து நீதிபதி இ. த. விக்னராஜா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரின் வாழ்த்துரைகள் இடம் பெறும்.

பவளவிழா நாயகியின் முன்னுரை - தலைமையுரைகளைத் தொடர்ந்து சிறப்புரையையும் கந்தபுராணச் சொற்பொழிவு நூல் வெளியீட்டையும் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் நிகழ்த்துவார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உயர் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கலை அடுத்து திரு. நா. தவநாதன் நன்றியுரை வழங்குவார்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளது கலை நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் முடிவுறும். (க-09)


புத்தாயிரம் ஆண்டின் புதிய வரவு

ஞானம்ஸ் கல்வி நிலையம்

G. E. C.

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

தரம் 5 முதல்O/Lவரையிலான சகல பாடங்களும் எமது ஆற்றல் அனுபவமிக்க ஆசிரியர்களால் போதிக்கப்படவுள்ளது.

ஆரம்பம்: 09 - 01 - 2000

காலை 9-00 மணி

[00048]


### வன்னியில் தொடரும் மழையால்

# கனகராயன் குளம் உடைப்பெடுப்பு பொதுமக்கள் பலரும் பரிதவிப்பு

(வவுனியா)

வன்னிப்பகுதியில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் கனகராயன் குளம் உடைப்பெடுத்து பாய்வதாக நீர்ப்பாசன திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இக்குளத்தின் சேதமடைந்தபகுதிகளை தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவதால் புனரமைப்பு செய்ய முடியாது உள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

குளம் உடைப்பெடுத்ததன் மூலம் நெல் வயல்கள் பெரிதும் சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் பலரும் கவலையடைந்துள்ளனர்.


யாழ். லயன்ஸ் கழகம் நடாத்தும்

இலவச கண் பரிசோதனை

இடம்: யாழ். வைத்திய நிலையம்
166, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

காலம்: பிரதி வெள்ளிக்கிழமைகளில்
நண்பகல் 12 முதல் பி. ப 2 வரை
(7-1-2000 ஆம் திகதி தொடக்கம்)

பரிசோதிப்பவர்: லயன் A ஜெயக்குமார்
P-J- பெர்ணாண்டோ ஸ்தாபனம்

சேவையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் தமது பெயரினை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

லயன் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்
தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்.

(0004)


### ஜனாதிபதித் தேர்தல்

# கடமையில் ஈடுபட்ட ஊழியருக்கு விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு விபரங்களைக் கொண்ட சுற்றறிக்கையை தேர்தல் ஆணையாளர் டி. எம். பி. பி. தசநாயக்கா அனுப்பி வைத்துள்ளார்.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஊழியர்கள் தாம் கடமையாற்றும் திணைக்களங்கள் ஊடாக இக்கொடுப்பனவை பெற்றுக் கொள்ளமுடியும் என்றும்.

இக்கொடுப்பனவுகள் பங்குனி 31 ஆம் திகதிக்குள் வழங்கிமுடிக்கப்பட வேண்டும் என்றும் அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

# தொண்டர்ஆசிரியர்களுக்குநியமனம் பிறமாவட்டங்களிலும்வழங்கஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது போன்று வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் திரு. சுந்தரம் டிவகலாலா நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குமாறு கோரி நேற்று முன்தினம் திருகோணமலை தொண்டர் ஆசிரியர் சங்கம் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் முன் மறியற் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மாகாண ஆளுநர் திரு. அசோக ஜெயவர்தன கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும், திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களின் விபரம் குறித்து இன்று மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் திரு. அன்றிஸ்சில்லாவைச் சந்தித்துத் தான் பேசவுள்ளதாகவும் திரு. சுந்தரம் டிவகலாலா மேலும்தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்பே ஆசிரியர் நியமனத்தின் பொருட்டு கல்விச் சேவை ஆணைக் குழுவினால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட 1500 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

(ந)

## வீதி விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியை கடக்க முற்பட்ட பெண் ஒருவரை அவ் வழியால் வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயம், அடைந்தார்.

இச்சம்பவம் அண்மையில் மருதனா மடம் உடுவில் வீதியில் இடம் பெற்றது மயிலிட்டி பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து உடுவில் பகுதியில் வசித்து வந்த ஆண்டி கலைமணி [39 வயது] என்பவரே படுகாயமடைந்தார் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

(க-58)

## மைதானத்திற்கு காணிஅன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுபிரதேச சபைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கென நெடுந்தீவின் முன்னாள் கிராம அதிகாரி நா.கணபதிப்பிள்ளை தமது காணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நெடுந்தீவின் முன்னாள் கிராம சபைத் தலைவரும் கிராம அதிகாரியுமான சு. நாகேந்திரம் அவர்களின் பெயரில் இந்த விளையாட்டு மைதானம் அமையவுள்ளது.

(க)

## கடன்கள் வழங்கப்படுகிறது

யு. என். ஏச். சி. ஆர் அனுசரணையுடன் மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்காக கடன் வழங்கப்பட்டுள்ளது.

புலோலி மத்தி மாதர் சங்க அங்கத்தவர் 16 பேருக்கும் மாதனை மாதர் சங்க அங்கத்தவர் 10 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது,

இத் திட்டத்தின் கீழ் 26 குடும்பங்கள் நன்மை அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க- 23)

## நெடுந்தீவில் மரமுந்திரிகை செய்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மர முந்திரிகை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான முன் ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மாணவர் அனுமதி

யாழ். கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கல்வி ஆண்டு 2000 இற்கான மாணவர்களுக்கான அனுமதிகள் தரம் 1-11 வரை வழங்கப்படுவதாக அதிபர் திருமதி எஸ். நவரட்ணம் தெரிவித்துள்ளார்

பாடசாலையில் தரம் ஒன்றிற்கான வகுப்பறையும் செயற் கூடமும் கல்வித் திணைக்களத்தால் அமைத்துத் தரப்பட்டுள்ளதாகவும் இதனால் மாணவர் பெரிதும் பயனடைவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## சுழிபுரம் வீதி திருத்தம்

(சில்லாலை)

வடலியடைப்புச் சந்தியில் இருந்து பனிப்புலம் பகுதி ஊடாக சுழிபுரம் கிழக்கு திருவடிநிலைப் பிரதேசம் வரை நீண்டுசெல்லும் பிரதான வீதி தற்போதுதார் ஊற்றித் திருத்தப்படுகிறது.

இவ் வீதி திருத்தப்படுவதால் இதுவரை காலமும் தடைப்பட்டிருந்த சுழிபுரம் கிழக்கிற்கான பஸ் சேவை மீண்டும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டு.மின்சார சபைக்கு பாவனையாளர் 75 இலட்சம் பாக்கி செலுத்த வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை மின்சார சபைக்கு மின் பாவனையாளர்கள் 75 இலட்சம் ரூபாவை பாக்கியாகச் செலுத்த வேண்டியுள்ளதாக மாவட்ட மின் பொறியியலாளர் எம். பரஞ்சோதி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மின் கட்டணம் 5000 ரூபாவைத் தாண்டிய பாவனையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. அதற்கும் ஒரு மாத காலத்திற்குள் கட்டணத்தை செலுத்தாதவர்களின் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. கடந்தவருடம் மாத்திரம் 1500பேரின் மின்சாரம் இவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தற்போது தடையின்றி மின்சாரம் கிடைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## 10 ஆம்திகதி விரிவுரைகள் ஆரம்பம்

[சாவகச்சேரி]

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இரண்டாம் வருட மாணவர்களிற்கான விரிவுரைகள் இம் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

(க 21)

## 5 தமிழ் இளைஞர்கள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதி சந்திப் பகுதியில் நேற்று மாலை திடீரெனப் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டு ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடிக்கப்பட்ட இச் சுற்றிவளைப்பில் பின்னர் கைதுசெய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும் மேல் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

[வா]

## பஸ் சாரதி கொழும்பிற்கு: அனுப்பிவைப்பு

(களுவாஞ்சிக்குடி)

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த கணபதிப்பிள்ளை தலவராசா என்ற பஸ் சாரதி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

(க - 14)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு மீள் நியமனம்

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் 54 பேருக்கு மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது,

கடந்த வருடம் முதல் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியராக இதுவரை கடமையாற்றிய 54 பேருக்கும் இவ் வருடம் முதல் மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அஞ்சலில் சேர்க்கப்பட்டுள்ளதாக வடமராட்சி கல்விவலய பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார்.

(க-23)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவலை ஊக்குவிக்க விரைவில் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து, இன்னுமொரு கட்சிக்கு மாறுவதை ஊக்குவிக்கும் வகையில் புதிய சட்டமூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கையில்;

குறிப்பிட்ட சட்டமூலம் நிறைவேற்றப்படின் உறுப்பினர்கள் கட்சி தாவலுக்கு மேலும் வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்டத்தின்படி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாம் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சியிலிருந்து விலகும் பட்சத்தில் அவர் தமது பதவியை இழக்க வேண்டிய சாத்தியக் கூறுகளே அதிகமாக உள்ளது.

ஐ. தே. க. உறுப்பினர்கள் பலர் கட்சிக்குள் இருந்தபடியே பொ. ஐ. மு. கட்சிக்கு ஆதரவு வழங்கி வரும் இவ்வேளையில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பொ. ஐ. மு. தக்கவைத்துக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறுத்தப்பட்ட ஆசிரிய இடமாற்றம் மீண்டும் அமுலில் கொண்டுவரப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலை முன்னிட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆசிரிய இடமாற்றம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரண தெரிவித்துள்ளார்

இது தொடர்பான பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட பிரிவுகளுச்கு கடந்த வாரம் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் இம் மாதம் முதல் தேசிய பாடசாலைக்கான ஆசிரிய இடமாற்றம் அமுலுக்கு கொண்டு வரப்படும் அத்துடன் மாகாண சபை ஆசிரியர்களின் இடமாற்றங்களை அமுல்படுத்தவும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நகரப் புறப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமாக கடமைபுரிவோர் ஏனைய கிராமப்புறப்பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கு புதிய கல்வி சீர்திருத்தம் பற்றி மீண்டும் அறிவுறுத்தவும்

(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் க.பொ.த (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான பொது வினாத்தாள் பற்றி மீண்டுமொருமுறை மாணவர்களின் கவனத்திற்கு கொண்டுவரும்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பாடசாலை அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

இச் சீர்திருத்தத்தின் படி எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் க. பொ. த [உயர்தர] பரீட்சைக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகளில் தோற்றும் மாணவர்கள் அனைவரும் இவ் வினாத்தாளுக்குப் பதிலெழுதிப் போதிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இப் புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகில் இவ்வாண்டு புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்

### பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகில் புத்தாயிரமாம் ஆண்டில் பல புதிய கற்கை நெறிகள் இடம் பெற உள்ளன எனப் புறநிலைப் படிப்புகள் அலகின்இணைப்பாளர்இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சமூக நலனும் சேவைகளும், வானியலும் சோதிடக் கலையும், உளவளத்துணை, இதழியல், திரைப்பட ரசனை, புகைப்படக்கலை, வீதி யொழுங்குகள் பற்றிய பயிற்சி நெறி ஆகியன வே புதிதாக கற்பிக்கப்பட உள்ளன.

ஒவ்வொரு கற்கை நெறிக்கும் ஏறத்தாழ 50 பேரின் விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் இக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-29-7)


## இதயத்தை வருடும் உணர்வலைகள்



அமரர் கந்தையா நவரத்தினம்

பூமியில் 27 - 11 - 1925

நிமலன் அடியில் 07 - 12 - 1999

''குடம்பை நனிற்றொழிய புட்பறந்ததே உடம்பொரு உயிரிடை நட்பு''

- நண்பர்கள்.

கோண்டாவில் மேற்கு.
06-01-2000

(00047)

# புத்தாண்டுப் பலன் - 6

## கும்பம்

அவிட்டம் 3 ஆம் பாதம் முதல் சதயம் பூரட்டாதி 3 ஆம் பாதம் வரையிலுள்ள நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தங்கள் பெயரின் முதலெழுத்துக்களாக கு, கே, கோ, ஸா, ஸி, ஸீ, ஸே, தா என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இப் பலன்கள் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் பதினொன்றாவது ராசியாக அமைந்திருப்பது கும்பம். இந்த ராசிக்கு அதிபதி சனீஸ்வரன். இது ஒரு ஸ்திர ராசி. சனிக்கிரகம் மகரராசிக்கும் கும்பராசிக்கும் அதிபதியாக இருந்தாலும் கும்பராசியில் தான் சனிபகவானுக்குப் பலம் அதிகம். இந்தராசியில் பிறந்தவர்கள் பெருமபாலானோர் வேதாந்திகள். மகான்கள், தீர்க்கதரிசிகள், சோதிட சாஸ்திர நிபுணர்களாக திகழ்வார்கள், இவர்கள் ஆழ்ந்த சிந்தனையும், மகத்தான மனத்துணிவும் உள்ளவர். அவசர புத்தியுள்ளவர்கள், இவர்கள் மற்றவர்களின் சலனபுத்தியும் சந்தேக குணமும் இவர்களுக்குப் பிடிப்பதில்லை. கடினமான உழைப்பில் அதிக நம்பிக்கையுள்ளவர்கள், வாழ்க்கை வசதியிருந்தாலும் ஆடம்பரமாக வாழ விரும்பாதவர்கள். தெய்வ பக்தியிலும் தெய்வீக விஷயங்களிலும் ஆன்மீகத் துறைகளிலும் இவர்கள் அதிக ஆர்வமுள்ளவர்கள். பேசவுதாலும் பிறரை எளிதில் கவர்ந்து விடக் கூடியவர்கள். பவரின் நன்மைக்காகத் தம்மையே தியாகம் செய்து கொள்வதற்குக் கூட இவர்கள் சிறிதும் தயங்கமாட்டார்கள். இவர்கள் ஒருபோதும் மன அமைதியுள்ளவர்களாக இராமல் ஏதேனும் ஒரு உருப்படியான செயலிலேயே கவனம் செலுத்துவார்கள். கருத்தினை மாற்றிக்கொள்ளாத செயல் வீரர்கள். சிற்றின்ப நாட்டம் அதிகமுள்ளவர்கள். எந்தச் செயலை எந்த நேரத்தில் செய்தால் அதிகப் பயன்களைப் பெறமுடியுமென சிந்தித்து செயல்படக்கூடியவர்கள். கும்ப ராசிப் பெண்கள் எப்போதும் தகுதிக்கும் தரத்திற்கும் உரியவர்களைத்தான் அதிகமாக நம்புவார்கள். வாலிப வயதில் நவநாகரீக சிந்தனைகளில் அதிக ஆர்வம் காட்டக்கூடியவர். இவ்ராசிப் பெண்கள் தம்மைமறந்து ஆழ்ந்து தூங்குவதிலும் ஒய்வெடுத்துக் கொள்வதிலும், இன்பசுகங்களில் இலயித்திருப்பதிலும், அளவு கடந்த ஆர்வமும் ஆசையும் உள்ளவர்கள். இவர்களுக்கு உடன்பிறந்தவர்கள் உதவுவது அரிது. இப்பெண்கள் சிற்றின்பத்தில் விரக்தியும் அதனால் ஞானமுதிர்ச்சியும் அடைவது உண்டு. காதலை தெய்வீகமாக கருதுவார்கள். இவர்கள் மிகவும் தந்திரசாலிகள். இவர்களிடம் பிறருக்காக மனமிரங்கும் சுபாவமுண்டு. குடும்ப நிர்வாகிகளாக விளங்குவார்கள். இவர்களின் பிறவி இயல்பே பிறரால் அடைய முடியாததை அடைவதும் ஆண்டுஅனுபவித்து மகிழ்வதுமாகத்தான் இருக்கும். கும்ப ராசிக்காரர் தொழில் வியாபாரம் ஆகியவற்றின் பங்காளராகவோ, வாழ்க்கைத்துணைவராகவோ தேர்ந்தெடுப்பதற்கு இடபம், மிதுனம், துலாம் தனுசு ஆகிய இராசியினரைத் தேர்ந்தெடுப்பது அதிஸ்டம் நிறைந்திருக்கும்.

கும்பராசியின் அதிபதி சனி பூஜைக்குரிய தெய்வம்- சிவன் அதிஸ்டநிறம் சாப்பல் நிறம். அதிஸ்ட இரத்தினம் கருநீலம் அதிஸ்ட எண் 8, அதிஸ்ட திசை மேற்கு, கிழக்கு. இவ் ராசியாளருக்கு இவ் ஆண்டு முக்கியகிரகமான சனியும், வியாழனும் நாலாம்வீட்டுக்கு சஞ்சாரம் செய்வது அபயோகமாகும். வியாழ பார்வையும் திருப்தி தரவில்லை. இராகு கேது இடப்பெயர்வும் சுபிட்சம்தரவில்லை. தொழில் துறையில் முறைகேடுகள் உருவாகும், எதிர்பார்க்கும் இலாபம் கிட்டாது. பங்காளர் தொல்லை உருவாகும். குடும்பத்தில் மனவேற்றுமை உருவாகும். உடல்நிலை பாதிக்கும், அன்னியர் பகையுண்டு. புத்திரர் கவலை அதிகமாகும் திருமணமாகாதவர்களுக்கு தொடர்ந்து கவலை தரும். பெண்களுக்கு வேலைக்கஸ்டம் அதிகமாகும். பதவி உயர்வுகள் தாமதமாகும். கடன் சுமை மேலும் அதிகமாகும். மணவாழ்க்கை மகிழ்ச்சி தராது. மாணவர்கள் கல்வியில் மோசமான நிலைகளைச் சந்திப்பர். நண்பர்கள் வன்மம் கொடுப்பர். விவசாயிகள் முதலீடுகளை இழக்கும் நிலை இருந்துவரும். கடும் உழைப்பு ஏற்ற பலன்களைத் தராது. கலைஞர்கள் அவதியுறுவர். பொருளாதார நெருக்கடி மிகுந்த அபயோகமான ஆண்டு.

## மீனம்

பூரட்டாதி 4ம் பாதம் முதல் உத்தரட்டாதி, ரேவதி வரையிலான நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும்; தங்களின் பெயரின் முதல் எழுத்துக்களான தீ, து, ஶ்ரீ, ஐ, தே, தோ, சி, சீ, என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் பன்னிரெண்டாவது ராசி மீனம், இந்த ராசிக்கு அதிபதி குரு பகவான். தனுசு ராசிக்கும் குரு பகவான் அதிபதியாக இருந்தாலும் மீனராசியில் தான் குரு பகவான் அதிக பலன் பெறுகின்றார். இவர்கள் இயற்கையிலே சிரித்துப் பேசும் தன்மையினர் வெகு விரைவில் மற்றவர்களின் உள்ளத்தில் உள்ளதைக் கண்டறியும் ஆற்றல் வாய்ந்தவர்கள். மற்றவர்களுக்கும் உதவுவதில் மனமகிழ்ச்சியடைபவர்கள், மற்றவர்களின் அறிவையும் திறமையையும், அழகையும் இரசிப்பவர்கள். நெருக்கடியான கட்டங்களில் எப்படியாவது தப்பித்துக் கொள்பவர்கள் மீனராசிக்காரர் தான், இவர்கள் தொழில் துறைகளில் எவ்வளவு முன்னேற்றம் கண்டாலும்குடும்ப வாழ்க்கையில் பல்வேறு சோதனைக்குள்ளாகி விடுவார்கள். இவர்கள் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் இறை வாழ்வுக்கு போபவர்கள் மீனராசியாளர். தான் சிறிய துன்பங்களையும் பெரிய துன்பமாகக் கருதி அங்கலாய்ப்பவர்களும் இவர்கள் தான் நீண்ட நேரம் தர்க்கம் செய்யாமல் பேச்சை அளவோடு நிறுத்திக் கொண்டு விடுவார்கள். இவர்கள் எப்போதும் சுற்றி வளைத்துப் பேசுவதில் பிரியமுள்ளவர்கள். தொழிலில் மற்றவர்களின் பொறுப்பை தாமாகவே ஏற்றுக் கொண்டு அதற்காக வருந்தவும் செய்வார்கள். இவ்ராசியினர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் யாரையும் நம்ப மாட்டார்கள். எத்தொழிலையும் செய்வார்கள். இலட்சிய மனைவி வாய்க்கவேண்டுமென கற்பனை செய்யும் இவர்களுக்கு அப்படியான மனைவி அமைவதில்லை. இவ்ர்ராசிப் பெண்கள் துடிப்புடனும் படபடப்புடனும் பேசும் குணமுடையவர். மிகவும் உணர்ச்சியடையக்கூடியவர். நாகரிக போதையினர். வாய் துடுக்கானவர். சுயகௌரவத்தை இழக்காதவர்கள், அன்பில்லாதவரை மதிக்க மாட்டார்கள். காதலுக்கு அடிமையாகுபவர்கள். இவர்களுக்கு சிற்றின்பத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள், உயர்ந்த நிலையினரை மணக்கும் பாக்கியமுள்ளவர்கள். பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் செல்வம் நிலைக்க யோகமுள்ளவர்கள், மனம் போல மாங்கல்யம் அமையப் பெற்றவர்கள், இவர்களுக்கு குழந்தைகள் மீது அவ்வளவு மனப்பிடிப்பு இருக்காது. இந்தராசியினர் தொழில் வியாபாரம் ஆகியவற்றில் நண்பர்களாகவோ, பங்காளர்களாகவோ அல்லது வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகவோ, இடபம், சிங்கம், மகரம், கும்பம் இராசியினரைத் தேர்த்தெடுப்பது அதிஸ்டம் தருவதாகும். இந்த இராசியாளர் பூஜைக்குரிய தெய்வம் யோகீஸ்வரி, அதிஸ்ட நிறம், மஞ்சள், அதிஸ்டஎண் மூன்று, அதிஸ்ட திசை வடமேற்கு, இந்த இராசியினருக்கு முக்கிய கிரகங்களான சனி, பகவானும் வியாழபகவானும், முயற்சிஸ்தானமான மூன்றாம் வீட்டுக்கு இடம் பெயர்கின்றார். இவர்களுக்கான ஏழரைச்சனி நீங்கி சுபிட்சம் நிறைந்த யோகபலன்கள் ஆரம்பமாகவுள்ளது. வியாழ பகவான் தனது பார்வையால் கனத்திர யோக இலாபஸ்தானங்களைப் பார்ப்பது. யோகத்தைத் தரும். இராகு கேது மாற்றமும் சுபபலன்களைத்தரவுள்ளது. தொழில் முயற்சிகளில் நீண்டகாலத் துயர் நீங்கி லாபம் பெருகும். பங்காளர்கள் ஒத்துழைப்பு தருவர். குடும்பத்தில் மகிழ்ச்சியும் கலகலப்பும் உருவாகும். புத்திர பாக்கியம் கிட்டும். காணி, வீடு வாங்கும் காலமிது. மணமாகாதவர்களுக்கு திருமண பாக்கியம் கிட்டும், தொழிலற்றவர்கள் தொழில்வாய்ப்பைப் பெறுவர். பெண்களுக்கு மகிழ்ச்சியான காலமிது, செய் தொழிலில் உயர்வும், அதிகாரிகளின் பாராட்டும் கிட்டும், பொதுப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு பாராட்டு கிட்டும், மாணவர்கள் கல்வியில் கடின உழைப்பும், முயற்சியில் வெற்றியும் உருவாகும். பெறுபேறுகள் நல்ல முறையில் அமையும். விவசாயிகள் அதிகலாபம் ஈட்டுவர், கலைஞர்களுக்கு கௌரவம் கிட்டும்.

- ஜோஸ்யர் அனுஷியா -

# இல. நிர்வாக சேவை ஆட்சேர்ப்பில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை

(ஏறாவூர்)

இலங்கை கணக்காளர் சேவை மற்றும் நிருவாக சேவைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இன விகிதாசாரம் பேணப்படாமை குறித்து தமிழ் பேசும் பரீட்சாத்திகள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

993, 94, 96, 98 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காளர் சேவை நியமனத்தின் போது தமிழ், முஸ்லிம் சமுகங்களிலிருந்து தலா ஒருவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

1999 ஆம் ஆண்டு நடைபெற்ற நிர்வாகசேவைக்கான நியமனத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 153 பேரும், முஸ்லீம்கள் இருவரும் தெரிவாகினர். கடந்த ஆண்டில் நடைபெற்ற கணக்காளர் சேவைக்கான ஆட்சேர்ப்பில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த38 பேரும் 2 தமிழர்களும் தெரிவாகினர்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற கணக்காளர் சேவை ஆட்சேர்ப்பில் 14 சிங்களவரும் ஒரு தமிழருமே அடங்குகின்றனர்.

இதேசமயம் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் கணக்காளர்களுக்கான அறுபது வெற்றிடங்கள் உள்ளன.

மாகாணக் கல்வியமைச்சின் கீழ் மாத்திரம் 22 வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அரச திணைக்களங்களில் நிரந்தர கணக்காளர்கள் நியமிக்கப்படாததினால் இலிகிதர்களே அக் கடமைகளைச் செய்ய வேண்டியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வடக்கு- கிழக்கு மாகாணத்தில்

# விவசாயத்துறையை மேம்படுத்த ஆளுநர் தலைமையில் முக்கிய கூட்டம்

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நீர்ப்பாசன விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பான விஷேட கூட்டம் இன்று மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா தலைமையில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

வடகிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் உலக வங்கிப் பிரதிநிதிகள், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், அரச அதிபர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம் மாகாணத்தில் மேற்படி துறையை மேம்படுத்த உலக வங்கி 32 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மலசலகூடங்கள் மாற்றியமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களின் பாவனையிலிருந்த பதினாறு வாளி மலசல கூடங்கள் நீர் மலசல கூடங்களாக பருத்தித்துறை நகர சபையால் இலவசமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

# பிரபல சிங்கள திரைப்பட நடிகை வீடு இனம் தெரியாதோரால் தீக்கிரை

(கொழும்பு)

சிங்களத் திரைப்படவுலகின் முன்னணி நட்சத்திரமான அனோஜா வீரசிங்கவின் வீடு நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் தீ வைத்து கொளுத்தப்பட்டதில் வீட்டின் பெரும் பகுதியும் பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களும் எரிந்து நாசமாகின.

மொனராகலைப் பகுதியில் அமைந்துள்ள நடிகை அனோஜாவின் வீட்டிற்கு இரவு 11. 30 மணியளவில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் வீட்டில் உள்ளோர் வெளியேற முடியாதவாறு கதவுகளை பூட்டிவிட்டு, பெற்றோல் ஊற்றி வீட்டைக் கொளுத்திஉள்ளனர்.

ஓடுபிரித்து உள்இறங்கிய இனந்தெரியாத குழுவினரால் வீட்டில் இருந்தோர் மீது பெற்றோல் ஊற்றிக் கொளுத்தும் முயற்சியில் ஈடுபட்ட போது வீட்டில்இருந்த அனைவரும் கூக்குரலிட்டுக் கத்தியதில் அயலவர் உடன் விரைந்து உள்இருந்தவர்களைக் காப்பாற்றினர்.

இதற்கு சற்று நாட்கள் முன்பும் வாகனம் ஒன்றில் வந்த இனம்தெரியாத கோஷ்ரியினர் நடிகைவீட்டின் மீது கைக்குண்டு தாக்குதல் நடாத்தியதும் தெரிந்ததே.

(9)

# புத்தாயிரமாண்டே வருக! வருக!

புத்தாயிரம் ஆண்டே வருக! வருக!
புவியுறோர் நலம்காக்க நல்லருள் தருக
பொய்யோடு வாழ்வோரை புறத்தே தள்ளி
பொறாமையிற் துடிப்பவரைப் புதைத்திடுவாயே
மெய்யுடன் உறவாடி மேதினியில் நலம்காணும்
மேன்மையுடை மாந்தரை மேல் நிலையில் வைத்து
நல்லார்கள் வாழ்ந்தாலே நல்லறம் தழைக்கும்
நானிலத்தில் நற்பண்பு நன்றோங்க செய்வாய்.

நீர்வை மணி

பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்.
- குறள்

# வலம்புரி

## செயலர் விடுக்கும் வேண்டுகோள்

எமது மாணவர்கள் எதிர்காலத்தில் தம் சுய காலில் நிற்பதற்கு வேண்டிய தகைமைகளைப் பெறுதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் கற்பித்தல் கலாச்சாரத்தில் இருந்து கற்றலுக்கு உதவும் கலாச்சாரத்திற்கு மாறவேண்டும். சுயகாலில் நிற்ப தென்பது மாணவன் தங்கி நிற்கும் கலாச்சாரத்திலிருந்து தாங்கி நிற்கும் கலாச்சாரத்திற்கு மாறி நிற்றலாகும். துரதிஷ்ட வசமாக அவனது புறச்சூழல் பெரும் பாலானவை மாணவனை தங்கி நிற்கும் சலாச்சாரத்திற்கே இட்டுச் செல்கின்றன.

பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் அர்ப்பணிப் போடு சம்பந்தப்பட்டோர் தொடர்ந்தும் கடமையாற்ற வேண்டும். புத்தாயிரமாம் ஆண்டில் வேலைகள் பன்முகப்படுத்தப்பட்டதாக அமைய வேண்டும். அத்தகைய செயற்பாடும் தியாக சிந்தனையுமே தங்கிநிற்கும் கலாச்சாரத்திலிருந்து தாங்கி நிற்கும் கலாச்சாரத்திற்கு இட்டுச் செல்ல வழி கோலும்.

மலரப்போகும் புத்தாயிரத்திலும் இருபத்தோராமாண்டிலும் ஆங்கில மொழியின் அறிவும் கணனி அறிவும் அறிவியல் சார்துறைக்கு மட்டு மன்றி நாளாந்த வாழ்க்கைக்கும் இன்றியமையாதனவாம். இவ்விரு துறையிலும் அறிவற்றோர் அறிவிலிகள் எனக் கருதப்படுவர். தொழில் வாய்ப்பினையும் இழப்பர். எனவே அத்துறைகள் வளமடைய ஆவன செய்ய வேண்டும்.

ஒரு குழந்தை முதல் இரண்டு வருடங்களிலே எழுபத்தைந்து வீத வளர்ச்சியடைகிறது. இவ் வளர்ச்சி தாயின் கருவறையில் இருந்து தொடங்குகிறது. எனவே போஷாக்கு இன்றியமையாதது. இல்லாமை குழந்தையின் ஆரோக்கியத்தை அழிக்கிறது. பெரும் எண்ணிக்கையில் மாணவர் இடைவிலகுகிறார்கள். ஆயிரக்கணக்கில் பாடசாலை வராத குழந்தைகளின் எண்ணிக்கை பெருகிறது. பல்வேறு சூழல்கள் மேலே குறிப்பிட்டவற்றிற்கு காரணிகளாகின்றன.

மேலே சொன்ன கருத்துக்களை உள்வாங்கி புத்தாயிரத்தில் புத்தெழுச்சி பெறுவோம் என்பது கல்விச்செயலர் சுந்தரம் டிவகலாலாவின் பேரவாவும், புரிந்துணர் செயற்பாட்டிற்கான உந்து தலுமாகும்.

-அன்புடன் ஆசிரியர்

# அம்பாறையில்புதுவகைநோய்பரவல்
# 2 பேர் மரணம்;பெருமளவினர் பாதிப்பு

(ஏறாவூர்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் மூளையைத் தாக்கும் ஒரு வகையான மலேரியா காய்சல் பரவிவருவதாக மாவட்ட வைத்திய அதிகாரி கே. பரமானந்தம் தெரிவித்தார்.

இந் நோய் குறிப்பாக பெரிய நீலாவணை, மத்திய முகாம், நாவிதன்வெளி மற்றும் குடியேற்றக் கிராமங்களில் தீவிரமாகப் பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு சில தினங்களுக்குள் நூற்றுக்கும் மேற்பட்டோர் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பிளாஸ்மோடியம் பல்சிபாம் என்றழைக்கப்படும் ஒரு வித நுண்ணங்கியினாலேயே இந் நோய் பரவுவதாக வைத்திய நிபுணர்கள் கூறினர்.

இவ்வகையான கிருமி மூளையைத் தாக்கும் சக்தி கொண்டது.

கடந்தவாரம் கல்முனை கல்லாறு பிரதேசத்தில் கடுமையான மலேரியா காய்சலினால் பீடிக்கப்பட்ட இருவர் மரணமாகினர். இவர்கள் குறிப்பிட்ட வகை கிருமிகளினால் பாதிக்கப்பட்டிருக்கலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

## மரத்திலிருந்து வீழ்ந்த வயோதிபர்

(யாழ்ப்பாணம்)

கள் சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இச் சம்பவம் அண்மையில் கொட்டடிப் பகுதியில் இடம் பெற்றது,

இச் சம்பவத்தில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சீனியர் பொன்னுத்துரை [62 வயது] என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ், பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (க-58)

## தற்கொலை குண்டுதாரி எவ்வாறு பிரமுகர் பஸ்ஸில் இடம் பிடித்தார்?

கொழும்பு மாநகர சபை குண்டு வெடிப்புடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தற்கொலைக் குண்டுதாரி எவ்வாறு முக்கிய பிரமுகர்களின் பஸ்ஸில் இடம் பிடித்தார் என்பது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்,

இதேவேளை இன்று இலங்கை வரும் அமெரிக்க குற்றப்புலனாய்வு அதிகாரிகளுடன் இது பற்றிய விடயங்களை கலந்துரையாடிய பின்னர் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## கைதடியில் சாராய வடிசாலை

[பருத்தித்துறை]

கைதடியில் சாராய வடிசாலை யொன்று 50 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு வருகின்றது.

இவ்வடிசாலையில் பனங்கள்ளிலிருந்து சாராயம் வடிக்கப்படவுள்ளதால் இப் பகுதியில் சீவல் தொழிலாளிகள் மிகுந்த பயனடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

## வீதி திருத்தமும் குழாய்க் கிணறு அமைத்தலும்

[ மந்திகை ]

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சில வீதிகளில்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இந்திரம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள 271 மீற்றர் வீதியும் அல்லையம்பதி வீதி 295 மீற்றரும், கிளான் வேம்படி வீதி 365 மீற்றரும் உடுப்பிட்டி கரும்பவெளி வீதி 395 மீற்றர் வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளது.

மணற்பாறி ஜனசக்தி ச. ச. நிலையம் தேவரையாழி ஞான வைரவர் ஆலயம் ஆகியவற்றுக்கு குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. [ க-23 ]

## கரச்சியில் விவசாயிகளுக்கான புதிய நிறுவனம் ஆரம்பிப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி கரச்சிப் பகுதியில் விவசாயிகளுக்கான விதை வழங்கல் உற்பத்தி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சுயதேவைப் பூர்த்தியை நோக்கமாகக் கொண்டு நல்லின நெல் விதை, நாற்று மற்றும் உப உணவுப் பயிர்களான பயறு, உழுந்து, நிலக்கடலை, மரக்கறி, தெங்கு போன்ற பயிர்களின் விதை நாற்றுக்களே இந் நிறுவனத்தால் உற்பத்தி செய்து வழங்கப்பட உள்ளதாக தெரிய வருகிறது. [க-7]

## பொற்கோவில் தாக்கப்பட்டமைக்கு சோனியா மன்னிப்பு கோரவேண்டும்

(புதுடில்லி)

இந்திராகாந்தி தலைமையிலான அரசால் 1984 இல் பொற்கோயில் ஆக்கிரமிக்கப்பட்டதற்கு காங்கிரஸ் கட்சியின் தற்போதைய தலைவியும் இந்திராகாந்தியின் மருமகளுமான சோனியா காந்தி மன்னிப்புக் கோர வேண்டும் என பொற்கோவில் நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் எதிரொலியாக அண்மையில் இந்தியா அமிர்தசரஸில் அமைந்துள்ள சீக்கியர்களின் புனிதஸ்தலமான பொற்கோயிலுக்கு இந்திய காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்தி கடந்தவாரம் விஜயம் செய்தபோது அரசியல்வாதி ஒருவருக்குக் கொடுக்கப்படுகின்ற மரியாதைகளில் எவையும் அவருக்கு வழங்கப்படவில்லை.

பலத்த பாதுகாப்புடன் பொற்கோயிலுக்குள் சென்றிருந்த சோனியாகாந்தி சாதாரண பிரஜை ஒருவரைப் போலவே தனது வணக்கத்தை முடித்து வெளியேறினார்.

இதேவேளை தமது கோரிக்கை நிறைவேற்றப் பட்டால் அடுத்த தடவை அவர் பொற்கோயிலுக்கு வருகைதரும்போது நிச்சயமாக உரிய மரியாதை வழங்கப்படுமென பொற்கோயில் தகவல் உத்தியோகத்தர் கூறி இருப்பதாக பி. ரி. ஐ. தெரிவிக்கிறது.

## இரண்டு நூற்றாண்டுகள் வாழ்ந்த அமெரிக்க பெண்மணி மரணமானார்

(நியூயோர்க்)

சாராநெளஸ் எனும் அமெரிக்க மாது இரண்டு நூற்றாண்டுகள் இம் மண்ணுலகில் வாழ்ந்துவிட்டு இறைவனடி சேர்ந்துள்ளார். இவரே மிகவும் வயதான மனிதர் எனக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

ஹொலிவூட்டின் நிலக்கரி நகரான பென்ஸில்வேனியாவில் 1880 செப்ரெம்பர் 24-ம்திகதி பிறந்த இவர் இன்னும் இரண்டே நாட்கள் உயிர் வாழ்ந்திருப்பின் மூன்று நூற்றாண்டுகள் உயிர் வாழ்ந்தவர் என்ற பெருமையையும் தட்டிச்சென்றிருப்பார். எனினும் இந்தப் பெருமை பெறாமலேயே இவர் தனது 119-ம்வயதில் கடந்த வியாழக்கிழமை இயற்கை மரணமடைந்துள்ளார்.

## பக்கவாத நோயை குணப்படுத்தும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது

(சியோல்)

தென்கொரிய ஆய்வாளர்கள் அல்பியூமர் பக்கவாத நோய்களைக் குணப்படுத்தும் மருந்து ஒன்றைக்கண்டு பிடித்துள்ளனர்.

தென்னாபிரிக்க தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருந்தியல் துறைப் பேராசிரியர் யூல் யூல்-சூன் தலைமையிலான குழு ஒன்று இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளது இது பற்றி மேலும் தெரியவருவதாவது.

மூலிகைகளில் இருந்து பெறப்படத்தக்கதான டீகைற்றோ எவைடியாமைன் எனப்படும் இந்த இரசாயனப் பொருளை எலிகளில் செலுத்தி பரிசீலிக்கப்பட்ட போது மூளைக் கலங்களைப் பாதுகாத்து கலங்கள் வளர்வதற்கு உதவியதை கண்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (9)

## பல்கேரியாவில் தொடரும் பனியால் இயல்பு வாழ்க்கை பாதிப்புறுகிறது

(பல்டேரியா)

பல்கேரியாவில் கடந்த 10 நாட்களாக தொடரும் பனியினால் இயல்பு வாழ்வு பாதிக்க பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடுமையாக பொழியும் பனியினால் 200க்கும் மேற்பட்ட இடங்களில் மின்சாரம், தொலைபேசி, தண்ணீர் விநியோகம் போன்றவை துண்டிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இக்கடும் பனியினால் மிக மோசமாக மத்திய வடகிழக்கு பல்கேரியா பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கே சாலைகளில் மக்கள் நடமாட முடியாத அளவுக்கு 60 செ.மீ கனத்திற்கு பனி படர்ந்திருப்பதாகவும் சோபிய வானொலி அறிவித்துள்ளது. (க-90)

## இஸ்ரேலிய இராணுவப் படையில் பெண்களை அனுமதிக்க சட்டம்

(ரெல்அவிவ்)

இஸ்ரேலில், இராணுவப் படைப்பிரிவுகளில் பெண்களை அனுமதிப்பதற்கான சட்டம் அமுல்ப்படுத்தப் பட்டுள்ளது.

இதுபோன்றதோர் சட்டம் அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டும் என 1992 இல் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் புத்தாயிரம் ஆண்டிலேயே இச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

இஸ்ரேலிய பெண்கள் தங்களது 18 ஆவது வயதில் இராணுவத்தில் சேர்ந்து இரண்டு அல்லது மூன்று வருடங்கள் இராணுவத்தில் கட்டாய சேவை புரிய வேண்டும் என்று மேலும் அச்சட்டம் தெரிவிக்கிறது

## இந்தோனேசிய- கிழக்கு திமோர் உறவுகள் வலுவடைய வாய்ப்பு உண்டு
### அதிகாரிகள் தகவல்

(இந்தோனேசியா)

இந்தோனேசிய அரசாங்கம் அடுத்த மாத முடிவிற்குள் கிழக்குத் திமோருடன் சுமூகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவிரும்பி உள்ளதாக இந்தோனேசிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் ஆயத்த நடவடிக்கையாக இந்தோனேசியா கிழக்குத் திமோரில் ஓர் அலுவலகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இதே வேளை இந்தோனேசிய அதிகாரிகள் குழு ஒன்றும் வர்த்தகர் குழு ஒன்றும் கிழக்குத் திமோரில் உள்ள வர்த்தக முதலீட்டு வசதிகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்திருப்பதாயும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14 )

### கொக்கட்டிச் சோலை படுகொலையில்

# அப்பாவி மக்களுக்காக வாதாட முன்வந்தவர் குமார்பொன்னம்பலம்

[மட்டக்களப்பு]

1991ம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் திகதி மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 67 அப்பாவி இலங்கைத் தமிழ் மக்கள் இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் முன் விசாரணைகள் நடைபெற்ற போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வாதாடுவதற்கு முன்வந்தவர் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலமாவார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் படுகொலை சம்மந்தமாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

இராணுவத்தினருக்கு எதிரான விசாரணை என்று அறிந்து அனுபவமிக்க தமிழ் சட்டத்தரணிகள் பயந்தாங்கொள்ளியாக இருந்த வேளையில் துணிந்து வந்து ஆஜரான துணிகரமிக்க மறத்தமிழன் ஒருவனை இன்று தமிழ் மக்கள் இழந்து விட்டனர்.

கொக்கட்டிச்சோலை படுகொலையின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக எது விதமான சன்மானமுமின்றி ஆஜரான குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலை குறித்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

### ஜனவரி 1ம் திகதி முதல்

# திருநெல்வேலிச் சந்தையில் புதிய நடைமுறைகள் அமுல்

திருநெல்வேலிச் சந்தையில் கடந்த 1ம் திகதி ஜனவரி மாதத்திலிருந்து விவசாய உற்பத்தி பொருட்களுக்கான புதிய கழிவு முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேசசபைத் தலைவர் திரு க. மணிபல்லவராஜன் (நிசாந்தன்) தெரிவித்தார்.

இதுவரை காலமும் ஒரு சாக்கு நிறைக்கு 5கிலோவும் ஒரு உரபாக்நிறைக்கு3கிலோவும் கழிக்கப்பட்டு வந்தது:

ஆனால் புதிய நடைமுறையின்படி ஒருசாக்கு நிறைக்கு 3கிலோவும் உரபாக்நிறைக்கு 1கிலோவும் கழிக்கபடும் எனவும் தெரிவித்தார்

இதே வேளை 10 கிலோவிற்கு மேற்பட்ட நிறையுள்ள விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 1கிலோ மட்டுமே கழிக்க முடியும்

இதனை நல்லூர் பிரதேச சபையின் வருமான மேற்பார்வையாளர்கள் கண்காணிப்பார்கள் எனவும்அவர்மேலும் தெரிவித்தார்

திருநெல் வேலிச்சந்தையில் கழிக்கப்படும் நிறை குறைக்கப்பட வேண்டும் எனப்பல விவசாய உற்பத்தி அமைப்புகள் நல்லூர் பிரதேச சபைத் தலைவரிடம் கோரிக்கை விட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

குறிப்பிட்ட நிறைக் கழிவை உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் கருத்தில் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது

# 2பெண் உட்பட 6பொலிஸார் பலி!

(கொழும்பு)

கொழும்பு பிளவர் வீதியில் உள்ள பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாரியின் குண்டுவெடிப்பில் பலியான 2பெண் பொலிஸார் உட்பட ஏனைய பொலிஸாரின் விபரம் வருமாறு,

சுனில், நிஸங்கா, சந்திரலால் பண்டார, விஜயரட்ன யமுனா ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

### ஜெனரல் அனுருத்த

# ஆனையிறவு தாக்குதல் குறித்து வடபகுதி தளபதிகளுடன் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

கடந்த புதன் கிழமை முப்படைத் தளபதிகள் சகிதம் பலாலி வந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தே ஆனையிறவுத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து வடபகுதித் தளபதிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தியுள்ளார்.

யாழ்நகரத் தளபதி ஆனையிறவு கட்டளைத் தளபதி உட்பட பல வடபகுதி தளபதிகள் கலந்துகொண்ட இந்த முக்கிய மாநாட்டில் ஆனையிறவுப் படைத் தளப்பகுதிகளில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் சம்பந்தமாகவே முக்கியமாக ஆராயப் பட்டதாக அறியவந்துள்ளது. (க-13)

# இறந்தவர்களுக்கு 3.500,00 நஷ்ட ஈடு!

பிளவர் வீதியில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் இறந்தவர்களுக்கு தலா 3லட்சத்து 50 ஆயிரம் ரூபா வினை வழங்குவதற்கு ஜனாதிபதி புனர்வாழ்வு அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

### யாழ். லயன்ஸ் கழக ஆதரவில்

# வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பு இலவச கண்சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் 166, முதலாம் குறுக்குத் தெரு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ளயாழ் வைத்தியசாலையில் இலவச கண்பரிசோதனை சிகிச்சை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பி. ஜே. பெர்னாண்டோ ஸ்தாபன உரிமையாளரும் யாதி. லயன்ஸ் கழக உறுப்பினருமான எ. ஜெகு மாரினால் கண்பரிசோதனை பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நண்பகல் 12-00 மணிமுதல் பிற்பகல் 2-00 மணி வரை நடைபெற உள்ளது.

இச் சேவையினை பெற விரும்புவோர் முன் கூட்டியே மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கா. குலநாயகத்திடம்தங்கள்பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும் என யாழ். லயன்ஸ் கழக தலைவர் லயன் போராசிரியர் இரா. சிவச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

# இன்று முதல் எம். எஸ். எவ் வைத்திய சேவை ஆரம்பம்

(புலோலி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இன்று முதல் எம்.எஸ்.எவ்.வைத்திய சேவை நிபுணர் குழு தமது வைத்திய சேவையை ஆரம்பிக்கவுள்ளனர்.

இன்று காலை 11-30 மணிக்கு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயில் ஏறும் பெருமாள் தலைமையில் நடை பெறவிருக்கும் இவ் வைபவத்தில் வடக்கு -கிழக்கு மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி உமா சிவபாதசுந்தரம் கலந்து கொள்கிறார்.

இவ் வைபவத்தின் போது யாழ், போதனா வைத்திய சாலையில் கடமையின் போது இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வைத்திய கலாநிதி அ. சிவபாதசுந்தரத்தின் உருவப்படமும் பட்டயக்கணக்காளர் சோமசுந்தரம்பிள்ளை அவர்களினால் திரைநீக்கம் செய்து வைக்கப் படவுள்ளது இவ் வைபவத்தில் டாக்டர் எஸ். இராசலிங்கமும் உரையாற்றுவார்.

### கிணற்றில் வீழ்ந்த இளம் பெண் மரணம்

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த வேளை கப்பி அறுந்ததனால் கிணற்றில் வீழ்ந்த இளம் பெண் மரணமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நவாலிப் பகுதியில் இடம்பெற்றது.

அரசடிச் சந்தி நவாலியைச் சேர்ந்த தங்கத்துரை தர்சினி (வயது-19) என்ற இளம் பெண்ணே மரணமடைந்தவராவார். இவரது சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரிசோதனைக்காகவும் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

### காங்கேசன் தடுப்பு முகாமில்

# 3 பெண்கள் உட்பட 14 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

(ஆனைப்பந்தி)

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளில் 14 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி திரு. ந. ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 பேர்களில் மூன்று பெண்களும் 11 இளைஞர்களும் அடங்குவர்.

# புங்குடுதீவு இளம் பெண் படுகொலை விசாரணை நாளைவரை ஒத்திவைப்பு

(ஆனைப்பந்தி)

கடந்த வாரம் புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுப் படுகொலை சம்பவம் தொடர்பாக நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொண்டபோது சாட்சியங்கள் ஆஜராகத் தவறியமையினாலும், கொழும்பில் இருந்து பிரேத பரிசோதனை அறிக்கைகள் கிடைக்காமையாலும் மேற்படி வழக்கு நாளை (வெள்ளிக்கிழமை) க்கு ஒத்திவைக்கப்பட்டதாக பதில் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்றைய தினம் வழக்கிற்கு சமூகம் தந்த புங்குடுதீவு தெற்கு கிராமசேவையாளர் குமாரசாமி சந்திராவிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் அந்த வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த மறுநாள் தான் வேலணைக்கு சென்றிருந்தவேளை ஒரு பிராமணப் பெண்ணின் சடலம் புங்குடுதீவில் இருப்பதாக தெரியவந்ததைத்தொடர்ந்து அங்கு சென்று அச் சடலத்தைப் பார்வையிட்டபோது அலங்கோலமான நிலையில் சடலம் இருக்கக் கண்டேன்.

அச் சடலத்தைச் சூழ பொது மக்கள் நின்று பார்த்ததாகவும் குறிப்பிட்டார். [த:29]

### நேற்று....

நீண்டநேரம் நடமாடியதை பொலீஸார் அவதானித்துள்ளனர் இவ் வீதியில் தான் முக்கியமான அமைச்சர்கள் பலரும் பிரயாணம் செய்வது வழக்கம்.

சந்தேகத்துக்கு இடமாக நடமடிய இப்பெண்ணை பொலீஸார் விசாரித்தபோது அவருக்கு சிங்களம் தெரியாததால் தமிழ் தெரிந்த பெண் பொலீஸார் ஒருவரை அழைத்து விசாரணை செய்தனர்.

விசாரணையின் போது, தான்மட்டக்களப்பில் இருந்து வந்ததாகவும் சவுதி அரேபியாவுக்கு தன்னை அனுப்புவதற்கு ஏஜென்ஸி ஒருவர் அழைத்து வந்ததாகவும் அப்பெண் கூறியதைத் தொடர்ந்து அவரது தேசிய அடையாள அட்டையை பரீசீலித்தபோது அதுபோலியானது என்றும் அதில் திலகரட்ன யசோதா கல்முனை அக்கரைப்பற்று என்று இருந்தாலும், சந்தேகம்கொண்ட பொலிஸார் அவரை கைதுசெய்ய முற்படுகையில் அப்பெண் தன்னை விடும்படி அழுது குழறியதாகவும், அதன்பின் அப்பெண்ணின் கைகள் ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்ணுற்ற பொலிஸார் கையை தூக்குமாறு பணித்த போது அப்பெண் குண்டை வெடிக்கவைத்தாகத் தெரிய வருகிறது.

இந்த பாதையால் பயணம் செய்யும் முக்கிய பிரமுகர் ஒருவரை இலக்குவைத்தே இந்த தற்கொலை குண்டுதாரி அங்கு வந்திருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்த தற்கொலை குண்டுதாரியான பெண் 19அல்லது 20வயது மதிக்கத்தக்கவர் என்றும், கறுப்பு காற்சட்டையும் நீலநிற சேட்டும் அணிந்திருந்தார் என்று தெரிவித்துள்ள பெலிஸார் விரிவான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பிளவர் வீதியும் சேர் ஏன்டீசில்வா மாவத்தையும் போக்குவரத்திற்கு மூடப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக கோட்டை நீதவான் செய்யத் தொடுவஸ்தலத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை நடத்தினார்.

### தமிழ்க் காங்ரஸ்...

தலைமறைவாகி விட்டார்

இச்சம்பவம் தொடர்பாக துப்பாக்கிச்சூடு நிகழ்ந்த இடத்துக்கு சற்றுத்தொலைவில் இருக்கும் பெண்ஒருவர் சூட்டுச்சம்பவம் நடந்த 10 நிமிடத்துக்குப் பின்னர்போய் பார்த்த போது காரின் சீற்றில் ஒருவர்சூட்டுக்காயங்களுடன்கொல்லப் பட்டிருப்பதை அறிந்து பொலிசாருக்கு தகவல் கொடுத்தார் இதனை அடுத்து குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொள்ளப்பட்ட செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது

குமார் பொன்னம்பலத்துடன் காரில் சென்ற நபர் கடந்த 2 மாதகாலமாக தொலைபேசி மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டதாகவும் சம்பவதினம் அன்று அவரை தாம் நேரில் கண்டதாகவும் குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திர குமார் தெரிவித்தார்

இச் சம்பவம் தொடர்பாக குமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்காவலாளி தகவல் தருகையில், குமார் பொன்னம்பலத்தைத் தேடிவந்த இளைஞருடன் குமார் உடை மாற்றிக்கொண்டு அவருடன் தனது பென்ஸ் காரில் சென்றதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திர குமாரிடம் வாக்கு மூலம் பெறும் பொருட்டு இன்று காலை 9-30 மணிக்கு சமூகம் கொடுக்குமாறு கல்கிசைப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனையை கல்கிசை பதில் நீதிவான் தர்மதாஸா மேற்கொண்டார். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை குமார் பொன்னம்பலத்தின் சடலம் அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் படவில்லை.

### கருத்துக்...

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள கண்டண அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்மந்தனினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இத்தகைய கொலைகள் நாட்டைப் பீடித்திருக்கும் வன்செயல் பிணிக்கு முடிவு கட்ட உதவ மாட்டாது, ஒரு பிரஜை சுதந்திரமாக சிந்தித்துக் கருத்து வெளியிடும் உரிமையை முற்றாக மறுக்கும் செயல் அதுவாகும் என்று அவ்வறிக்கையில் காணப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.